# பாதிக்கப்படும் பெரியோர்களைப் பாதுகாக்க முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான ஆணையர் ஒருவரைப் புதிதாக நியமிக்கப் போவதாக நியூ சவுத் வேல்ஸ் அரசு அறிவித்திருக்கிறது



Tamil

**ஊனமுற்ற பெரியோர்கள் மற்றும் முதியோர்களுக்கு வீடு மற்றும் சமூக அமைப்புகளில் இழைக்கப்படும் கொடுமை, உதாசீனம் மற்றும் சுரண்டலிருந்து அவர்களை நன்கு பாதுகாக்க, முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான ஆணையர் ஒருவர் 2019 ஜூலை 1 முதல் நியமிக்கப்படுவதாக நியூ சவுத் வேல்ஸ் அரசு அறிவித்திருக்கிறது.**

## ஆணையர் ஏன் தேவைப்படுகிறார்?

நமது சமூகத்தில் அதிகம் பாதிக்கப்படக்கூடிய உறுப்பினர்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை நியூ சவுத் வேல்ஸ் அரசு தீவிரமாகக் கையில் எடுத்துள்ளது. துரதிருஷ்டவசமாக கொடுமை, உதாசீனம் மற்றும் சுரண்டல் போன்றவற்றால் ஊனமுற்றோர் மற்றும் முதியோர் மிகவும் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்பதை நாங்கள் அறிவோம்.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நியூ சவுத் வேல்ஸ் இன்னும் செய்வதற்குரிய வாய்ப்புகளைப் பற்றி பல்வேறு மறுஆய்வுகள் மற்றும் விசாரணைகள் கோடிட்டுக் காட்டுகின்றன. அவற்றுள் ஓம்புட்ஸ்மனின் சமீபத்திய அறிக்கையான *'நியூ சவுத் வேல்ஸில் பாதிக்கப்படும் பெரியோர்கள் மீதான கொடுமை மற்றும் உதாசீனம் – நடவடிக்கை தேவை'* மற்றும் முதியோர் கொடுமை பற்றிய பாராளுமன்ற விசாரணை 2016 போன்றவை அடங்கும்.

ஆணையரின் நியமனமானது, ஊனமுற்ற பெரியோர்கள் மற்றும் முதியோர்களுக்கு வீடு மற்றும் சமூக அமைப்புகளில் இழைக்கப்படும் கொடுமை, உதாசீனம் மற்றும் சுரண்டலை எதிர்கொள்ளும் வண்ணம் நமது திறனை வலுப்படுத்துவதன் மூலம், இந்த அறிக்கைகளில் எழுப்பப்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்கும்.

## ஆணையர் என்ன செய்வார்?

ஆணையரின் முக்கிய பங்கு இவைதாம்:

- ஊனமுற்ற பெரியோர்கள் மற்றும் முதியோர்களுக்கு வீடு மற்றும் சமூக அமைப்புகளில் இழைக்கப்படும் கொடுமை, உதாசீனம் மற்றும் சுரண்டல் போன்ற குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்தல்.
- விசாரணைக்குப் பிறகு பாதிக்கப்பட்ட பெரியோர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள்/பராமரிப்பாளர்களுக்கு ஆதரவு வழங்குதல்.
- கொடுமை, உதாசீனம் மற்றும் சுரண்டல் தொடர்பான முழுமையான பிரச்சினைகளை அரசுக்குத் தெரிவித்துப் பரிந்துரை செய்தல்.
- கொடுமை, உதாசீனம் மற்றும் சுரண்டல் பற்றிய சமூக விழிப்புணர்வை ஏற்படுத்துதல். அவற்றை எவ்வாறு தடுப்பது, அடையாளம் காண்பது மற்றும் எதிர்கொள்வது என்பதும் இதில் அடங்கும்.
- ஊனமுற்றோர்க்கான சேவைகள் மற்றும் உதவியுடன் கூடிய தங்கும் உறைவிடங்கள் தொடர்பான அதிகாரபூர்வ சமூகப் பார்வையாளர்கள் நிகழ்ச்சித் திட்டத்தை நிர்வகித்தல்.

## ஆணையரிடம் என்னென்ன அதிகாரங்கள் இருக்கும்?

பிரச்சினைகள் முறையாக விசாரிக்கப்படுகிறதா என்பதை உறுதி செய்யும் வகையில் ஆணையருக்குப் புதிய, வலுவான அதிகாரங்கள் கொடுக்கப்படும். அவற்றுள் பின்வருவன அடங்கும்:

- அதன் சொந்த இயக்கத்திலோ அல்லது பரிந்துரை அல்லது புகாரை வைத்தோ விசாரணையைத் தொடங்குவதற்கான அதிகாரம்.
- ஒரு தேடல் ஆணைக்கு விண்ணப்பித்து, அதை செயல்படுத்துதல் மற்றும் விசாரணையின் ஒரு பகுதியாக ஆதாரங்களைக் கைப்பற்றுதல் போன்றவற்றுக்கான அதிகாரம்.
- தகவல் சேகரிக்கும் மற்றும் பகிர்ந்து கொள்ளும் அதிகாரங்கள்.

முக்கியமாக, ஆணையர் சார்பற்றவராக இருப்பார். அத்துடன் கடமைகளைச் செயலாற்றுவதில் அமைச்சகத்தின் வழிகாட்டுதலிலோ மற்றும் கட்டுப்பாட்டிலோ இருக்க மாட்டார்.

NSW GOVERNMENT

CS0668 1218

## மற்ற நிறுவனங்களுடன் இணைந்து ஆணையர் எவ்வாறு பணியாற்றுவார்?

ஒவ்வொரு நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை ஆணையத்திலும் உள்ள புதிய, சிறப்புநிலை முதியோர் கொடுமைத் தடுப்பு அதிகாரிகள் ஆணையருக்கு ஆதரவு வழங்குவர். இந்த அதிகாரிகள் குற்றவியல் நடத்தை சம்பந்தப்பட்ட விஷயங்களை விசாரணை புரிவதிலும், குற்றத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் ஆணையருடன் நெருக்கமாகப் பணிபுரிவர்.

ஆணையரின் கவனம் மக்களுக்கு அவர்களுடைய வீடுகளிலும், சமூகத்திலும் என்ன நடக்கிறது என்பதில் இருக்கும். இருப்பினும், ஊனமுற்றோர் மற்றும் முதியோர் பரமரிப்பு சேவைகளைப் (NDIS ஆணையம் மற்றும் முதியோர் பராமரிப்பு முறையீடுகள் ஆணையர்) பெறும் மக்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புள்ள நிறுவனங்களுடன் அவர் நெருக்கமாக பணிபுரிவார்.

## நியூ சவுத் வேல்ஸ் முதியோர் கொடுமைத் தடுப்பு உதவி அழைப்புக்கு மாற்றாக ஆணையர் இருப்பாரா?

முதியோர் கொடுமைத் தடுப்பு உதவி அழைப்பின் பொறுப்புகள் ஆணையரிடம் சென்றுவிடும். புலனாய்வுக் கடமையைக் கூடுதலாகச் சேர்க்கப்படுவதன் மூலம் உதவி அழைப்பு பலப்படுத்தப்படும்.

## 2019 ஜூலை 1-க்கு முன்னர் கொடுமை, உதாசீனம் மற்றும் சுரண்டலைப் பற்றிய பிரச்சினைகளை நான் எங்கு தெரிவிக்கலாம்?

ஆணையர் நியமனத்துக்கு முன் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், நீங்கள் பின்வரும் அமைப்புகள் ஒன்றிலிருந்து உதவி வேண்டுமெனக் கேட்கலாம்:

| *உங்களுக்கு இவற்றைப் பற்றிய ஆதங்கம் ஏதும் இருந்தால்* | *தொடர்பு கொள்க:* | *தொடர்பு விவரங்கள்* |
|---|---|---|
| முதியோர் கொடுமை | முதியோர் கொடுமைத் தடுப்பு உதவி அழைப்பு | 1800 628 221 |
| ஊனமுற்ற நபர் ஒருவர் மீதான கொடுமை | தேசிய ஊனமுற்றோர் கொடுமை மற்றும் புறக்கணிப்பு உதவி அழைப்பு | 1800 880 052 |
| ஊனமுற்றோர் சேவை வழங்குநரின் நடத்தை | NDIS ஆணையம் | 1800 035 544 |
| முதியோர் பராமரிப்பு சேவை வழங்குநரின் நடத்தை | முதியோர் பராமரிப்பு முறையீடுகள் ஆணையர் | 1800 550 552 |
| அவசர உதவி தேவைப்படும் ஒரு காரியம் | நியூ சவுத் வேல்ஸ் காவல்துறை | 000 |

**மேலதிக விவரங்களுக்கு தயவுசெய்து பின்வரும் இணைய தளத்துக்குச் செல்லவும்: www.facs.nsw.gov.au** அல்லது **(02) 9377 6000** என்ற எண்ணில் அழைக்கவும்

NSW GOVERNMENT